பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**29 01 2026** **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. புதுதில்லியில் இன்று நடைபெற்ற பாசறை திரும்பும் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

2. உலகிலேயே மிக விரைவாக வளர்ச்சியடையும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதை பொருளாதார ஆய்வறிக்கை எடுத்துக்காட்டுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
3. நாட்டில் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக தலைமை பொருளாதார ஆலோசகர் திரு வி. அனந்தநாகேஸ்வரன் கூறியுள்ளார்.

4. கிரின்லாந்து பிரச்சினையில் அமெரிக்காவுக்கும், நேட்டோவுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படவில்லை என்று டென்மார்க் பிரதமர் **Mette Frederiksen** கூறியுள்ளார்.

5. ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட்டில், தமிழக அணிக்கு எதிரான போட்டியின் முதல் நாள் ஆட்டநேர இறுதியில் பரோடா அணி **5** விக்கெட் இழப்பிற்கு **247** ரன் எடுத்துள்ளது.

--இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>>

புதுதில்லியில் இன்று நடைபெற்ற பாசறை திரும்பும் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்

புதுதில்லி விஜய்சவுக்கில் இன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.

முப்படைகளின் பேண்டு வாத்தியக்குழு, வந்தே மாதரம், **Bharat Ke Shaan, Sare Jahan Se Acha** உள்ளிட்ட தேசப்பற்று பாடல்களை இசைத்தன.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை குறிக்கும் வகையில் இந்திய விமானப்படையின் பேண்டு வாத்தியக்குழுவின் சிறப்பு நிகழ்ச்சியும் இதில் இடம்பெற்றது.

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, புதுதில்லியில் முன்னாள் பிரதமர் திரு தேவகவுடா உடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பல்வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பான, திரு தேவகவுடாவின் கருத்துகள் மிகவும் ஆக்கப்பூர்வமானது என்று கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட, திரு தேவகவுடாவின் ஆலோசனைகள் முக்கியமானது என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

உலகிலேயே மிக விரைவாக வளர்ச்சியடையும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதை பொருளாதார ஆய்வறிக்கை எடுத்துக்காட்டுவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், உலகளாவிய பொருளாதார நெருக்கடியின்போதும் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஏழு புள்ளி நான்கு சதவீதம் வளர்ச்சியடைந்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய வேலைவாய்ப்பு சேவை இணையதளம் மூலம், **2** கோடியே **30** லட்சம் பேருக்கு பணி நியமனம் அளிக்கப்பட்டதாக இந்த ஆய்வறிக்கையில் கூறியதை அவர் சுட்டிக்காட்டினார்.

**e-shram** இணையதளத்தில் **31** கோடி பேர் பதிவு செய்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளதையும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

நாட்டில் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக தலைமை பொருளாதார ஆலோசகர் திரு வி. அனந்தநாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கை குறித்து புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேலைவாய்ப்பின்மை விகிதம் ஐந்து புள்ளி நான்கு சதவீத்திலிருந்து, தற்போது நான்கு புள்ளி ஒன்பது சதவீதமாக குறைந்துள்ளதாக கூறினார்.

சர்வதேச அளவில் இந்தியா பொருளாதார மையமாக உருவெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி **7** புள்ளி நான்கு சதவீதமாக அதிகரிக்கக்கூடும் என்று அவர் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>>

நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது

என்று இந்திய செலவு கணக்காளர் நிறுவனத்தின் மத்தியக்குழு உறுப்பினர் டாக்டர் வி. முரளி தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி. முரளி - 57 Sec.)***

<<<<<<<>>>>>>>

நீதிமன்றங்களில் டிஜிட்டல் அடிப்படையிலான நிர்வாகத் திட்டங்களை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் இன்று தொடங்கிவைத்தார்.

புதுதில்லியில் இதுதொடர்பான நிகழ்ச்சியில் பேசிய அவர், பல்வேறு உயர்நீதிமன்றங்களுடன் டிஜிட்டல் இணைப்புக்கு இது வழிவகை செய்யும் என்று கூறினார்.

உயர்நீதிமன்றங்களின் உத்தரவுகள் டிஜிட்டல் முறையில் மாவட்ட நீதிமன்றங்களுக்கு எளிதாக சென்றடைய இது வழிவகை செய்ய உள்ளது.

இதன்மூலம், உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் விரைந்து முடிக்கப்படும்

இந்நிகழ்ச்சியின்போது, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், புதிய செயலியை தொடங்கிவைத்தார்.

இதன்மூலம், வாகன அனுமதிக்கான கோரிக்கைகள் எளிதில் செயலி மூலம் அனுப்பிவைக்க முடியும்.

<<<<<<<>>>>>>>

கிரின்லாந்து பிரச்சினையில் அமெரிக்காவுக்கும், நேட்டோவுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படவில்லை என்று டென்மார்க் பிரதமர் **Mette Frederiksen** கூறியுள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், சுதந்திர நாட்டின் எல்லைகளை பாதுகாக்க டென்மார்க்குக்கு முழு உரிமை உள்ளதாக தெரிவித்தார்.

பிரான்சில் இப்பிரச்சினை தொடர்பாக டென்மார்க் பிரதமர் **Mette Frederiksen,** கிரின்லாந்து பிரதமர் திரு **Jens Frederik-**கும், பிரான்ஸ் நாட்டு அதிபர் இமானுவெல் மேக்ரானுடன் ஆலோசனை மேற்கொண்டனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய திரு இமானுவெல் மெக்ரான், கிரின்லாந்து பிரச்சினையில், டென்மார்க் மற்றும் கிரின்லாந்துக்கு பிரான்ஸ் முழு ஆதரவு அளிப்பதாக தெரிவித்தார்.

டென்மார்க் நாட்டின்கீழ், சுயாட்சி அதிகாரம் பெற்ற கிரின்லாந்து தீவின்மீது அமெரிக்கா உரிமை கொண்டாடும் நிலையில், அப்பிரச்சினைக்கு தீர்வுகாண ஐரோப்பா நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று இமானுவெல் மெக்ரான் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>>

சர்வதேச கடல் எல்லையை தாண்டி மீன்பிடித்ததாக கூறி கைது செய்யபட்டு சிறையில் உள்ள மீனவர்களை இந்தியாவும், பங்களாதேஷும் பரஸ்பரம் ஒப்படைத்தன.

பங்களாதேஷ் சிறையில் அடைக்கப்பட்ட 23 இந்தியா மீனவர்களையும், இந்திய சிறையில் அடைக்கப்பட்ட 128 பங்களாதேஷ் மீனவர்களையும், சர்வதேச கடல் எல்லையில் இருநாட்டு கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் பங்களாதேஷ் சிறைபிடித்த 142 இந்திய மீனவர்களும், இந்தியா சிறை பிடித்த 128 பங்களாதேஷ் மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

மீனவர்களின் பாதுகாப்புக்காக வெளியுறவு அமைச்சகம் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

சட்டீஸ்கர் மாநிலம் பிஜாப்பூர் மாவட்டத்தில் காவல்துறையினர் நடத்திய பதில் தாக்குதலில் இரண்டு மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டனர்.

இவர்களிடமிருந்து ஏகே-47 ரக துப்பாக்கி, பிஸ்டல் மற்றும் வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர் ஜிதேந்திரா யாதவ் தெரிவித்துள்ளார்.

மாவோயிஸ்டுகள் பதுங்கியிருப்பதாக வந்த தகவலையடுத்து, காவல்துறையினர் அங்கு சென்றபோது, மாவோயிஸ்டுகள் தாக்குதல் நடத்தினர்.

காவல்துறையினர் நடத்திய பதில் தாக்குதலில் மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>>

தாய்லாந்து விமானப்படையின் விமானம் விபத்துக்குள்ளானதில் இரண்டு விமானிகள் உயிரிழந்தனர்.

தாய்லாந்தின் **Chiang Thong** மாவட்டத்தின் வனப்பகுதியில் **AT-6** ரக பயிற்சி விமானம் விபத்துக்குள்ளானதாக அந்நாடு கூறியுள்ளது.

இந்த விபத்து தொடர்பாக, **Royal Thai** விமானப்படை விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

நேபாளத்தில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அந்நாட்டுக்கு பல்வேறு உதவிகளை இந்தியா வழங்கி வருகிறது.

காட்மாண்டுவில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்தியா சார்பில் நேபாள அரசுக்கு **250** வாகனங்கள் வழங்கப்பட்டது.

நேபாளத்தில் தேர்தல் சுமூகமாக நடைபெற அந்நாட்டு அரசின் கோரிக்கையை ஏற்று இந்தியா இந்த உதவி அளித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட்டில், தமிழக அணிக்கு எதிரான போட்டியின் முதல் நாள் ஆட்டநேர இறுதியில் பரோடா அணி **5** விக்கெட் இழப்பிற்கு **247** ரன் எடுத்துள்ளது.

சேலத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற பரோடா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

இரண்டாம் நாள் ஆட்டம் நாளை தொடர்ந்து நடைபெறும்.

-------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு இன்று உத்தரப்பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

-------------

தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Isharani Baruah** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<<<END>>>>>>>>**